தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, நவம்பர் 18, செவ்வாய்க்கிழமை.

கார்த்திகை 4, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

'' சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.''

தான் கருதியவற்றை நன்கு சொல்ல வல்லவனாய்ச் சொல்லும்போது சோர்வு இல்லாதவனாய், அஞ்சாதவனாய் உள்ளவனை மாறுபாட்டால் வெல்வது யார்க்கும் முடியாது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

இலங்கை அகதிகளுக்கு தமிழகத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள்.

46—(*வினா எண். 3936) **திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியுள்ள தமிழர்களுக்காக தமிழகத்தில் கட்டப்பட்டுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவற்றிற்கான மொத்த செலவு என்ன ?

(இ) எத்தனை வீடுகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (இ) : இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்காக தனியாக வீடுகள் அரசால் கட்டப்படுவதில்லை. ஆனால், தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு கண்டியிலுள்ள இந்திய ஹைகமிஷன் பரிந்துரைக்கேற்ப, வீட்டுக்கடன் பெறத் தகுதியுடையவர் என்ற பரிந்துரைக்கேற்ப வீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இந்த வகையில் 15,753 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள முழு உதவி அளிக்கப்பட்டு சொந்தமாக வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர்.

(ஆ) 31–12–1985 முடிய 39,127 குடும்பங்களுக்குத் தவணை வாரியாக வீட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், வீடுகள் கட்டி குடியிருந்து வரும் 15,753 குடும்பங்களும் உள்ளிட்டதாகும். எனவே, இது சம்பந்தமாக ரூ. 17,79,93,141 வீட்டுக் கடன் வழங்கப்பட்டதில் செலவாகியுள்ளது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாயகம் திரும்பிய இலங்கைவாழ் தமிழர்களுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கருணையும் கனிவும் கொண்டு பல்வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இப்படி நடைபெறுகின்ற போது இந்த தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக கொடுக்கப்பட்ட கடனை சில ஒப்பந்தக்காரர்கள் மொத்தமாகப் பெற்று, அந்த தாயகம் திரும்பியவர்களுடைய இயலாமையையும், அறியாமையையும், இல்லாமையையும் பயன்படுத்தி அவர்கள் கட்டுகின்ற வீடுகளை அந்த தாயகம் திரும்பியவர்களுக்கு ஒப்படைக்காமல் பல்வேறு இடங்களில், வேறு நபர்களை குடியமர்த்தி தாயகம் திரும்பியவர்களை ஏமாற்றுகின்ற நிலை நடைபெறுவதை அரசு அறியுமா/ அப்படி இருக்கின்ற நிலையை மாற்றுவதற்கு, அரசு மாநில அளவிலே அதிகாரிகளை கொண்டும், தாயகம் திரும்பிய தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டும், குழு அமைத்து தாயகம் திரும்பியோர் வீட்டுவசதிப் பிரச்சினையை மேற்பார்வையிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக வழங்கப்படுகின்ற கடன் அவர்களது வீடுகளை அவர்களே கட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். இதிலே ஒப்பந்தக்காரர்கள் எப்படி ஊடுருவுகிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் பெயரால் ஒரு வேளை கையெழுத்து வாங்கி ஏமாற்றி இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால் அது சம்பந்தமாக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். இருந்தாலும் தாயகம் திரும்பியோர் ஒரே பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்குள் ஒரு கூட்டுறவு அமைப்பை வைத்து இந்தக் கடனை பெற்று வீடு கட்டும் திட்டத்தை மேற்கொள்ளலாம்.

திரு. மு. மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாயகம் திரும்பியோரை சேர்ந்தவர்கள் ஏறத்தாழ 15,000-க்கு மேற்பட்டவர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதைப்போல, நம்முடைய அரசு கொடுக்கின்ற கடன் தொகை ஏறக்குறைய ரூ. 17 கோடியளவில் வருகிறது என்று சொன்னார்கள். இவ்வளவு பெரிய திட்டத்திற்கு அரசு தன்னுடைய பொதுப்பணித் துறை மூலமாக வீடுகள் கட்டித்தரக்கூடிய நிலையை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே ஒப்பந்தக்காரர்களை ஒழிப்பதற்கு இது சரியான வழியல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லு கின்ற நேரத்திலே 15,753 பேர்களுக்கு வீடுகள் வழங்குகின்ற திட்டத்தில் ரூ. 17 கோடி செலவிடப்பட்டதாகச் சொன்னார்கள். இந்தத் தொகை முழுவதும் மத்திய அரசு கொடுத்ததா அல்லது மாநில அரசு கொடுக்கின்ற தொகையா? இன்னும் தகுதியானவர் கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? நம்முடைய அனுதாபத்தை பெற்ற அவர்களுக்கு இன்னும் எத்தனை காலத்திற்குள் வீடுகள் கட்டிகொடுக்க முடியும் என்று அரசு நம்புகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பிய மொத்தத் குடும்பங்களின் எண்ணிக்கை 1,15,432. இவர்களுக்கு வீட்டுக் கடன்கள் என்கின்ற வகையில் ரூ. 17.79 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை 39,127 வீடுகளுக்குக் கடன் தரப்பட்டிருக்கின்றன. இந்த உதவிக்கான கடன் தொகையை நாம் மத்திய அரசிடமிருந்து பெறுகிறோம்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள சாத்தனூர் வட் டாரத்தில் ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? இவ்வாறு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதைவிட அவர்களையெல்லாம் நிரந்தரமாகப் பணிகளில் அமர்த்துவதற்கான திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்காவிலிருந்து இருவகைத் தமிழர்கள் இங்கே வந்திருக்கின்றனர். அவர்களில் ஒரு வகை யினர் தாயகம் திரும்பியோர் எனப்படும் ''ரிப்பேட்ரியேட்ஸ்'' எனப்படுபவர். இன்னொரு வகையினர் இங்கே அகதிகளாக ''ரெஃப்யூஜீஸ்'' என்று வந்திருக்கின்றனர். இவர்களில் மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் எந்த வகையினரைக் குறித்துக் கேள்வி கேட்டிருக்கின்றார் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே தனிக் கேள்வி கேட்டால், தகுந்த விவரங்கள் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.